بِسْمِ اللهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 7 | இதழ் 36

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஹிஜ்ரி கமரி 1444 - ஸஃபர் 11 ★ தபூக் 08 - ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ★ 08 செப்டம்பர் 2022


## அல்லாஹ்வின் கட்டளை

وَالَّذِيْنَ عَمِلُوا السَّيِّاٰتِ ثُمَّ تَابُوْا مِنْۢ بَعْدِهَا وَاٰمَنُوْۤا اِنَّ رَبَّكَ مِنْۢ بَعْدِهَا لَغَفُوْرٌ رَّحِيْمٌ ○

**பொருள் :**

தீய செயல்களைச் செய்துவிட்டுப் பின்னர் (அவற்றிலிருந்து விலகிக் கழிவிரக்கம் கொண்டு) மேலும் நம்பிக்கை கொள்வார்களாயின், நிச்சயமாக உம் இறைவன் இதன் பின்னரும் மிக்க மன்னிப்பவனும். மேன்மேலும் கருணை காட்டுபவனுமாவான்.

(அல் அஃராஃப்:154)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும். அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**திருக்குர்ஆனை அழகிய முறையிலும், இனிமையான குரலிலும் ஓதுவதும் ஒரு நல்ல விஷயமாகும். ஆனால், திருக்குர்ஆனை ஓதுவதன் அசல் நோக்கம் அதன் உண்மைத்துவம் மற்றும் ஞானங்களை பற்றி தகவல் பெற்றுக் கொள்வதாகும். மனிதன் ஒரு மாற்றத்தை தன்னுள் உருவாக்க வேண்டும்.**

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

உலகிற்கு தக்வாவிற்கான (இறையச்சத்திற்கான) போதனையை வழங்குவதே திருக்குர்ஆனின் அசல் நோக்கம் ஆகும். அதன் மூலம் நேர்வழியின் விருப்பத்தை பெற்றுக் கொள்ள முடியும். தற்போது, இந்த வசனத்தில் தக்வாவின் மூன்று படித்தரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

اَلَّذِيْنَ يُؤْمِنُوْنَ بِالْغَيْبِ وَيُقِيْمُوْنَ الصَّلٰوةَ وَمِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ

(அல்பக்ரா:4)

மக்கள் திருக்குர்ஆனை ஓதுகின்றனர். ஆனால், கிளிகளைப் போன்று சிந்திக்காமலும் புரியாமலும் ஓதிவிட்டு சென்றுவிடுகின்றனர். உதாரணமாக ஒரு பண்டித் தனது மந்திரங்களை கண்மூடித்தனமாக ஓதுகின்றார். அவரும் எதையும் புரிவதில்லை. கேட்பவர்களும் எதுவும் புரிவதில்லை. அதேபோன்று, திருக்குர்ஆன் திலாவத் செய்வதன் வழிமுறை எப்படி ஆகிவிட்டது என்றால், இரண்டு, நான்கு பாராக்கள் ஓதுகின்றனர். ஆனால், என்ன ஓதினோம் என்று அவர்களுக்கு எதுவும் தெரிவதில்லை. அதிகபட்சமாக, ராகத்துடன் ஓதப்படுகிறது. காஃப், அய்ன் போன்ற சொற்களை முழு உச்சரிப்புடன் ஓதப்பட்டுவிடுகிறது. (அவ்வளவுதான்.)

திருக்குர்ஆனை அழகிய முறையிலும், இனிமையான குரலிலும் ஓதுவதும் ஒரு நல்ல விஷயமாகும். ஆனால், திருக்குர்ஆனை ஓதுவதன் அசல் நோக்கம் அதன் உண்மைத்துவம் மற்றும் ஞானங்களை பற்றி தகவல் பெற்றுக் கொள்வதும், மனிதன் ஒரு மாற்றத்தை தன்னுள் உருவாக்கிக் கொள்வதும் ஆகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம்-387 காதியான் பதிப்பு 2018)

* * * * *

**உலகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டு மனிதன் இறைவனுடன் அன்பு கொள்ளவே முடியாது என்பது சில மக்களின் எண்ணமாக உள்ளது.**

**இஸ்லாம் உலகத்தை புறக்கணிப்பதற்கு போதனை நல்கவில்லை. மாறாக, உலகின் பணிகளில் பங்குபெற்றவாறு அதனை சீர்திருத்துவதற்கு கட்டளை வழங்கியுள்ளது.**

**நல்லவர்களை உலகிலிருந்து விலக்கி வைத்துவிட்டால், உலகின் சீர்திருத்தம் ஒருபோதும் நடைபெறமுடியாது என்பது வெளிப்படையாகும்.**

اِنَّهٗ لَيْسَ لَهٗ سُلْطٰنٌ عَلَى الَّذِيْنَ اٰمَنُوْا وَعَلٰى رَبِّهِمْ يَتَوَكَّلُوْنَ

(அந்நஹ்ல்:100)

இந்த வசனத்திற்கு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் விளக்கமளித்தவாறு கூறுகிறார்கள் :

உலகப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டு மனிதன் இறைவனுடன் அன்பு கொள்ளவே முடியாது என்பது சில மக்களின் எண்ணமாக உள்ளது. ஆக, இந்தக் கூற்றை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களின் பக்கம் இன்ஜீலை சுட்டிக் காட்டி கூறப்பட்டுள்ளது:

மேலும், ஐசுவரியவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப் பார்க்கிலும், ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும் (மத்தேயு:அதிகாரம் 19:வசனம் 24)

ஐசுவரியாவான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு கடினம்! ஏனென்றால்,

(2) ஐசுவரியாவான் தேவனுடைய

இதன் தொடர்ச்சி - 8ஆம் பக்கம்...

## நபிமொழி

**ஹஸ்ரத் நபி(ஸல்)அவர்கள் எந்த ஒரு யாசிப்பவரையும் நிராகரித்ததில்லை**

ஹஸ்ரத் ஸஹ்ல் பின் சஅத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். அன்னார் கூறினார்கள்: ஒரு பெண்மணி புர்தாவை எடுத்துக் கொண்டு வந்தார். இந்த புர்தா என்பது என்ன? என்று தாங்கள் அறிவீர்களா? என்று கேட்டார். ஆம். அது, ஓரப்பகுதி நெய்யப்பட்ட போர்வை என்று கூறப்பட்டது. அந்த பெண்மணி கூறினார்: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே! தங்களுக்கு அணிவிப்பதற்காக நான் எனது கைகளால் அதனை நெய்தேன். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அதனை பெற்றுக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு அதன் தேவை இருந்தது.

பின்னர் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எங்களிடம் வெளியில் வந்தார்கள். அதே போர்வை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வேட்டியாக (அணியப்பட்டு) இருந்தது.

அப்போது, மக்களில் ஒரு நபர், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களே இந்த போர்வையை எனக்கு அணிவதற்கு கொடுத்துவிடுங்கள் என்று கூறினார். சரி என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் சிறிது நேரம் சபையில் அமர்ந்திருந்தார்கள். பின்னர் உள்ளே சென்று, அதை கழற்றிவிட்டார்கள். பின்னர் அதனை அந்த நபருக்கு அனுப்பி வைத்துவிட்டார்கள். நீர், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம், இவ்வாறு யாசித்தது சரியான செயல் கிடையாது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் யாசிப்பவரை நிராகரிப்பது கிடையாது என்பதும் உமக்கு நன்றாக தெரியும் என்று அந்த நபரிடம் மக்கள் கூறினர்.

அதற்கு அந்த நபர், இறைவன் மீது ஆணையாக! நான் மரணித்த பிறகு அது எனது கஃபன் (ஆடை) ஆக இருக்க வேண்டும் என்பதற்காக நான் அதனை யாசித்தேன் என்று கூறினார். ஹஸ்ரத் ஸஹ்ல் (ரலி) அவர்கள் கூறினார்கள்: அதே போர்வை தான் அவரது கஃபனாக (பிற்காலத்தில்) இருந்தது.

(புகாரி தொகுதி 4, பாடம் வியாபாரம், காதியான் பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

## பிரிட்டனின் ஆண்டு மாநாடு 2022-ன் சந்தர்ப்பத்தில் விருந்து உபசரிப்பவர்களுக்கும், விருந்தினர்களுக்கும் வழங்கப்பட்ட பொன்னான அறிவுரைகள்

**இந்த ஜல்ஸா ஒன்றும் உலகத் திருவிழா கிடையாது**

**இன்னும் கூறப்போனால், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை கேட்பதற்காகவும், அதற்கேற்ப நம்மை ஆக்கிக் கொள்வதற்காகவும் நாம் இங்கு ஒன்றுகூடுகின்றோம். - ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள்**

**தங்களுக்கு தன்னார்வலர்களாக பணி செய்யக் கூடிய மக்கள் கிடைக்க வேண்டும் என்று உலகம் முயற்சி செய்கின்றது. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு முற்றிலும் அதற்கு எதிராக உள்ளது. அதாவது எவ்வளவு அதிகமாக பணி செய்பவர்கள் வந்துவிடுகின்றார்கள் என்றால், அவர்களை எப்படி சமாளிப்பது என்று நிர்வாகத்திற்கு கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது.**

**ஜல்ஸாவின் இந்த மூன்று நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு உணர்வுடன் தொண்டு செய்யுங்கள். மேலும் அவர்களுக்கு எப்போதும் இந்த உணர்வு இருக்க வேண்டும். அதாவது நாம் நமது அதிகாரிகளிடமிருந்தோ அல்லது எந்த ஒரு விருந்தினரிடமிருந்தோ இதற்கான பலனைப் பெறப்போவதில்லை.**

**ஸய்யிதுனா அமீருல் மு∴மினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டன் இஸ்லாமாபாத்திலுள்ள முபாரக் பள்ளிவாசலில் 05 ஆகஸ்ட் 2022,** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு ஸஹூர் மாதம் **05ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ اَلرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

இறைவனின் அருளால், பிரிட்டனின் ஆண்டு மாநாடு 2019-ற்கு பிறகு மீண்டும் பெரிய அளவில் நடைபெறுகிறது. கடந்த ஆண்டும் ஜல்சா நடைபெற்றது. ஆனால், குறுகிய எண்ணிக்கையுடன் நடைபெற்றது. இந்த வருடமும் கூட இந்த ஆண்டு மாநாடு பிரிட்டன் ஜமாஅத்தினுடையதாகவே உள்ளது. வெளிநாட்டு விருந்தினர்கள் மிகக் குறைவான எண்ணிக்கையிலேயே கலந்து கொள்கின்றனர். ஆயினும், மூன்று நாட்களும் இன்ஷா அல்லாஹ் பிரிட்டனின் அனைத்து ஜமாஅத்துகளும் இந்த ஆண்டு மநாட்டில் கலந்து கொள்வதற்கு அனுமதி உள்ளது. இன்ஷா அல்லாஹ் அனுமதி இருக்கும்.

இன்ஷா அல்லாஹ் நல்ல (எண்ணிக்கையில்) வருகை இருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது.

நாம் அனைவரும் அறிந்ததுபோன்று, கோவிட் காரணமாக ஆண்டு மாநாட்டின் தொடர் ஓர் ஆண்டு முற்றிலும் தடைபட்டது. மேலும், ஜல்ஸாவின் அருட்களிலிருந்து நம்மால் முறையாக பயன் பெறமுடியவில்லை. இந்த ஆண்டும் கூட இந்த தொற்றின் தாக்கம் கூடியும், குறைந்தும் வருகிறது. தற்போதும் கூட முழுமையாக முடிந்துவிடவில்லை. இன்னும் கூறப்போனால், சில இடங்களில் இங்கும் உலகின் வேறு சில நாடுகளிலும் கடந்த நாட்களில் தொற்று அதிகரித்துள்ளது. ஆயினும், அரசாங்கம் சார்பாக ஒன்று கூடுவதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் தற்போது தளர்த்தப்பட்டுள்ளன. ஆனால், நாம் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பது அதன் பொருள் அல்ல.

எவ்வாறிருப்பினும் அனைத்து முன்னெச்சரிக்கை அம்சங்களையும், (மாநாட்டில்) கலந்து கொள்ளக்கூடிய அனைவரும் கருத்தில் கொள்ள வேண்டும். மேலும் அவற்றை பேணவேண்டும்.

தற்காப்பு அம்சங்களில் ஒன்று என்னவென்றால், (மாநாட்டில்) கலந்துக் கொள்ளக்கூடிய அனைவரும் மாநாட்டு பந்தலில் அமர்ந்திருக்கும்போது மாஸ்க் அணிந்து இருக்கவேண்டும். அதேபோன்று, டியூட்டி கொடுக்கக் கூடிய அனைவரும் டியூட்டி கொடுத்துக் கொண்டிருக்கும்போதும் அல்லது வெளியில் சுற்றித் திரியும்போதும் மாஸ்க் அணிந்திருப்பதை பேணவேண்டும். அதேபோன்று (மாநாட்டு) நிர்வாகமும் இந்த ஆண்டு இந்த ஏற்பாட்டை செய்துள்ளது. அதாவது, காலையில் வரும்போதும்,திரும்பி செல்லும்போதும் இந்த நோய்க்கு சிறந்ததாக அவர்கள் கருதும் ஹோமியோபதி மருந்தை கொடுப்பதற்கு அவர்கள் ஏற்பாடு செய்துள்ளனர். அல்லாஹ் அதன் மூலம் குணமளிப்பானாக.

மருந்தை குணமளிக்கச் செய்வது அல்லாஹ்வின் பணியாகும். ஆனால், நாம் வெளிப்படையான முயற்சிகளை செய்ய வேண்டும். இது தொடர்பாக கலந்து கொள்ளக்கூடிய அனைவரும் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு நான் கூறிக் கொள்கிறேன்.

ஜல்ஸாவை கருத்தில் கொண்டு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்காக ஊழியர்களும், தன்னார்வத் தொண்டர்களும் தங்களது நேரத்தை தியாகம் செய்கின்றனர். பொதுவாக, ஜல்ஸாவிற்கு ஒரு வாரம் முன்பு குத்பாவில் நான் அவர்களுக்கு சில விஷயங்களின் பக்கம் கவனமூட்டுவது உண்டு. கடந்த குத்பாவில் என்னால் அதன் பக்கம் கவனமூட்ட முடியவில்லை. எனவே, இன்று நான் அது தொடர்பாக சில விஷயங்களை கூறுவேன். சில பிள்ளைகளும்,இளைஞர்களும், டியூட்டியில் புதிதாக சேர்ந்துள்ளனர். அவர்களுக்கும் (இதன் மூலம்) கவனம் ஏற்பட்டுவிடுகின்றது. கடந்த மூன்று ஆண்டுகளில், பாகிஸ்தானில் இருந்தும் இங்கு ஏராளமான மக்கள் வந்துள்ளனர். அவர்களுக்கு ஜல்ஸாவின் டியூட்டிகளில் அனுபவங்கள் இல்லை. ஒரு நீண்ட காலம் ஆகிவிட்டது. அங்கு பாகிஸ்தானில் ஜல்ஸா நடக்கவில்லை. இதன் பக்கம் கவனமூட்டுவதன் மூலம் அவர்களுக்கு தமது கடமைகளை நிறைவேற்றுவது பற்றியும் தெரிய வருகின்றது அல்லது தெரிந்து விடும். அதேபோன்று பழைய ஊழியர்களுக்கும் நினைவூட்டலாக அமைந்துவிடுகின்றது.

எவ்வாறிருப்பினும், சுருக்கமாக இது தொடர்பாக சிலவற்றை கூறுவேன். அதுமட்டுமின்றி, வரக்கூடிய

விருந்தினர்களுக்கும் சில விஷயங்களை நான் நினைவூட்டலாக கூறுவேன். நாம் அந்த விஷயங்களைக் கருத்தில் கொண்டால் பின்னர் ஜல்ஸாவின் ஆன்மீகச் சூழலிலிருந்து நாம் பயனடைந்துக் கொண்டிருப்போம்.

இந்த ஜல்ஸா ஒன்றும் உலகத் திருவிழா கிடையாது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறியுள்ளார்கள். (ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி ஹஸாயின் தொகுதி 6, பக்கம் 395)

இன்னும் கூறப்போனால், அல்லாஹ் மற்றும் அவனது தூதரின் கூற்றுகளை கேட்பதற்காகவும், அதற்கேற்ப நம்மை ஆக்கிக் கொள்வதற்காகவும் நாம் இங்கு ஒன்றுகூடுகின்றோம். (தற்போது) ஒன்றுகூடி இருக்கின்றோம். அல்லாஹ் மற்றும் தூதர் (ஸல்) அவர்கள் கூறியுள்ள விஷயங்களின் படி நாம் அமல் செய்யும்போது, அல்லாஹ் மற்றும் அவனது அடியார்களுக்குரிய உரிமைகளை அழகிய முறையில் செலுத்துபவர்களாக நாம் ஆகிவிட முடியும். எவ்வாறிருப்பினும் நான் கூறியது போன்று முதலில் ஊழியர்களுக்கு சில விஷயங்களைக் கூற விரும்புகின்றேன். மாஸ்க் அணிவது பற்றியும், மருந்துகள் தொடர்பாகவும் நான் ஏற்கனவே கூறிவிட்டேன். அதனை பேணி நடக்க வேண்டும். அல்லாஹ்வின் அருளால் நமது இளைஞர்களுக்கும், பிள்ளைகளுக்கும், முதியவர்களுக்கும், பெண்களுக்கும் இந்த விஷயத்திற்கான ஆர்வமும், புரிதலும் உள்ளது. அதாவது, நாம் ஜல்ஸாவில் வரக்கூடிய ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக நாம் நம்மை முன்நிறுத்தியுள்ளோம். மேலும் நாம் அழகிய முறையில் தொண்டாற்ற வேண்டும் என்பதை அவர்கள் புரிந்து வைத்துள்ளனர். தொண்டாற்றக் கூடிய அந்த மக்கள் எந்த ஒரு துறையுடன் தொடர்பு கொண்டவர்களாக இருந்தாலும் சரியே அல்லது எந்த ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவராக இருந்தாலும் சரியே. செல்வந்தராக இருக்கட்டும் அல்லது ஏழையாக இருக்கட்டும். அனைவரும் இந்த உணர்வுடனேயே (தொண்டாற்ற) வருகின்றனர். ஜல்ஸாவின் பணிகள் வெறும் இந்த மூன்று நாட்களில் மட்டும் நடைபெறுவதில்லை. மாறாக, பல வாரங்களுக்கு முன்பிருந்தே பணி துவங்கி விடுகின்றது. பணி எவ்வாறு நடைபெறுகின்றது? என்பதை தற்போது MTA - சிறு சிறு கிளிப்கள் (clips) வடிவில் ஒளிபரப்பி வருகின்றது. சில பணிகள் வெளியே சில கம்பெனிகள் அல்லது குத்தகைதாரரர்கள் மூலமாக செய்யப்படுகின்றன. ஆனால், அது அல்லாமலும் ஏராளமான பணிகள் உள்ளன. அதற்கு மனித ஆற்றல்களின் தேவை இருக்கின்றது. தன்னார்வத் தொண்டர்கள் தமது நேரத்தை செலவுசெய்தும், தொண்டுகளை முன்வைத்தும் அந்த பணிகளை முழுமை செய்கின்றனர். நான் கூறியதுபோன்று எல்லாத் தரப்பு மக்களும் பங்குபெறுகின்றனர்.

தங்களுக்கு தன்னார்வலர்களாக பணி செய்யக் கூடிய மக்கள் கிடைக்க வேண்டும் என்று உலகம் முயற்சி செய்கின்றது. ஆனால், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாறு முற்றிலும் அதற்கு எதிராக உள்ளது. அதாவது எவ்வளவு அதிகமாக பணி செய்பவர்கள் வந்துவிடுகின்றார்கள் என்றால், அவர்களை எப்படி சமாளிப்பது என்று நிர்வாகத்திற்கு கஷ்டம் ஏற்பட்டுவிடுகிறது. (அந்த அளவிற்கு அதிகமான தன்னார்வலர்கள் வந்துவிடுகின்றனர்)

ஜல்ஸாவின் வழக்கமான டியூட்டிகளுக்கு முறையாக முதலில் சார்ட் தயார் செய்யப்படுகின்றது. நிகழ்ச்சி நிரல்கள் தயாரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு துறைக்கும் அதன் தேவைக்கு ஏற்ப ஊழியர்கள் கொடுப்பதற்கு முயற்சி செய்யப்படுகின்றது. மேலும் ஊழியர்கள் கொடுக்கப்படுகின்றனர். ஆனால், ஜல்ஸாவிற்கு முன்னதாக வகாரே அமல் பணியாக இருக்கட்டும் அல்லது ஜல்ஸாவிற்குப் பிறகு நடக்கும் வகாரே அமல் பணிகளாக இருக்கட்டும் அதில் சிலமுறை எதிர்பார்ப்புகளுக்கு அதிகமாக மக்கள் வந்துவிடுகின்றனர். ஏனென்றால், பொதுவான அழைப்பு கொடுக்கப்படுகிறது. தற்போது, கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கூட ஹதீகத்துல் மஹ்தியில் எந்த அளவிற்கு தன்னார்வலர்கள் ஒன்றுதிரண்டுவிட்டார்கள் என்றால், நிர்வாகம் அதனை சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. அவர்களுக்கு உணவிற்கான சரியான ஏற்பாடு கூட செய்யமுடியாமல் ஆகிவிட்டது என்று எனக்கு தெரிய வந்துள்ளது. உள்ளபடியே, இவ்வளவு நபர்கள் உள்ளனர் என்பதை கண்டறிந்து முதலிலேயே நிர்வாகம் ஏற்பாடு செய்திருக்கவேண்டும். அது ஸியாஃபத் எனும் விருந்துஉபசரிப்புத் துறையினரின் பணியாகும். அந்த தன்னார்வத் தொண்டர்கள் ஒன்றும் விருந்திற்கான சந்தர்ப்பத்தில் ஒன்றுகூடவில்லை. காலை முதலே அவர்கள் பணி செய்திருக்கின்றனர் அல்லது அங்கே இருந்துள்ளனர். எனது கருத்தின்படி, நான் கடந்த ஜுமுஆவின் இறுதியில் ஜல்ஸா தொடர்பாக துஆவிற்காக கூறியிருந்தேன். மேலும், மாநாட்டில் பணி செய்யக்-கூடியவர்களுக்காகவும் துஆ செய்யுங்கள் என்று நான் கூறியிருந்தேன். எனவே ஓர் உணர்வுடன் இன்னும் அதிகமான மக்களும் தங்களது தொண்டுகளை வழங்கினர். எவ்வாறு இருப்பினும், வாரத்தின் இறுதி நாட்களில் (weekends) குறிப்பாக சிறப்பான ஏற்பாட்டை நிர்வாகம் செய்யவேண்டும். விருந்து உபசரிப்புத் துறை எதிர்வரும் நாட்களில் இதனை கருத்தில் கொண்டு இந்த விஷயங்களைக் குறித்துக் கொள்ள வேண்டும்.

அதேபோன்று, விருந்து உபசரிப்புத் துறையின் பணி இதுவும் ஆகும். அதாவது, பொதுவாக, ஜல்ஸாவின் நாட்களிலும் பெருமளவில் உணவு சமைக்கவேண்டும். இந்த வருடம் நடக்கும் ஜல்ஸாவில் சரியாக அனுமானிக்க முடியாது. நோயின் காரணமாக மக்கள் வருவார்களா? மாட்டார்களா? சிலர் அச்சத்தின் காரணமாக வருவார்களா? அல்லது வரமாட்டார்களா? என்று சில நபர்களுக்கு சந்தேகம் உள்ளது. ஆனால், ஒரு இடைவேளைக்குப் பிறகு, ஜல்ஸா நடைபெறுகிறது. எனவே, மக்கள் கண்டிப்பாக வருவார்கள் என்பது சிலரின் கருத்தாக உள்ளது. ஆனால், பொதுவாக நமது நிர்வாகத்தினருக்கு குறிப்பாக உணவு உண்பவர்களைப் பற்றியும், விருந்து உபசரிப்பு பற்றியும் கேள்வி எழும்போது அவர்களின் எண்ணம் எதிர்மறையாக அமைகிறது. அவர்கள் அதிகம் உணவைத் தயார் செய்வதற்கு பகரமாக, குறைந்த அளவில் உணவு தயார் செய்யுங்கள். மக்கள் குறைவாகவே வருவார்கள் என்ற எண்ணத்தின் பக்கமே அவர்கள் செல்கின்றனர். இது முற்றிலும் தவறான விஷயமாகும்.

வருகின்ற விருந்தினர்களுக்கு முழுமையான முறையில் விருந்து உபசரிப்பு செய்வது ஸியாஃபத் எனும் விருந்து உபசரிப்புத் துறையின் பொறுப்பாகும்.

அதேபோன்று இந்த இடத்தில் உணவு தொடர்பாகவும் வழிகாட்டல் வழங்கிவிடுகிறேன். அதாவது, இன்றைய நாட்கள் கோடைக் காலம் ஆகும். எனவே விருந்து உபசரிப்புத் துறையானது, இறைச்சியை வெட்டும்போது இறைச்சியை வெட்ட வெட்ட உடனடியாக சில்லரில் (chiller-ல) வைத்துக் கொண்டு செல்ல

வேண்டும். அவ்வாறல்லாமல் நாள் முழுவதும் வெளியில் கிடந்து வீணாகி பின்னர் அது மக்களை நோயாளி ஆக்கிவிடக் கூடாது. இதேபோன்று, ஏனைய உணவுகளையும் (தரமானதாக உள்ளதா? என) உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வாறு இருப்பினும், நான் ஏற்கனவே கூறிக்கொண்டிருந்த தன்னார்வலர்கள் தொண்டாற்றுவதற்காகவே வருகை தந்திருந்தனர். அவர்களுக்கு உணவு கிடைத்தாலும், கிடைக்கவில்லையென்றாலும் அவர்கள் மௌனமாக கலைந்து சென்றுவிட்டனர். ஆனால், நிர்வாகத்தின் ஒரு குறை முன்னால் வந்துவிட்டது.

நான் ஊழியர்களிடமும் இதனைக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஜல்ஸாவின் இந்த மூன்று நாட்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு இந்த உணர்வுடன் தொண்டு செய்யுங்கள். மேலும் அவர்களுக்கு எப்போதும் இந்த உணர்வு இருக்க வேண்டும். அதாவது நாம் நமது அதிகாரிகளிடமிருந்தோ அல்லது எந்த ஒரு விருந்தினரிடமிருந்தோ இதற்கான பலனைப் பெறப்போவதில்லை. நமக்கு பலன் கிடைக்கவும் கிடைக்காது என்ற உணர்வு உள்ளத்தில் இருக்கவேண்டும். மாறாக நாம் அல்லாஹ்வின் திருப்திக்காக இந்த விருந்தினர்களுக்கு தொண்டாற்ற வேண்டும்.

மேலும் தனது பிள்ளைகளையும் பசியிலும், தாகத்திலும் தூங்க வைத்துவிட்டு தாங்களும் பசியுடன் இருந்து விருந்து உபசரிப்பின் உரிமையை வழங்கிய அந்த சஹாபியின் முன்னுதாரணத்தையும், அவரது மனைவியின் முன்னுதாரணத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும். அவர்கள் விருந்து உபசரிப்பிற்குரிய உரிமையை நிறைவேற்றினார்கள். விளக்கை அணைத்துவிட்டு, தாங்களும் விருந்தினருடன் சேர்ந்து விருந்தில் கலந்து கொண்டிருக்கின்றோம் என்ற தோற்றத்தையே அவர்கள் விருந்தினரிடம் வெளிப்படுத்தினர். பின்னர், அல்லாஹ்வும் அவர்களின் அந்த செயலை எந்த அளவிற்கு பாராட்டினான் என்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கும் அதனை அறிவித்துக் கொடுத்தான். அடுத்த நாள், உங்களது திட்டத்தால், அதாவது விருந்தினர் உணவு உண்பதற்கு அந்த முஸ்லிம் தீட்டிய திட்டத்தால், அல்லாஹ்வும் புன்னகைத்தான் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அந்த சஹாபியிடம் கூறினார்கள். அல்லாஹ் அந்த விஷயத்தால் மகிழ்ச்சியடைந்தான். மேலும் திருக்குர்ஆனிலும் அதுபோன்ற தியாகம் செய்தவர்களை அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான்.

அந்த தியாகத்தை செய்யக்கூடியவர்கள் தன்னலமற்றவர்களாக திகழ்ந்து தியாகம் செய்கின்றனர். அந்த மக்களே வெற்றி பெறக்கூடியவர்களாக உள்ளனர். (ஸஹீஹுல் புகாரி,கிதாப் மனாகிபுல் அன்சார், ஹதீஸ் 3798)

ஆக, இதுவே சஹாபிகளுடைய விருந்து உபசரிப்பு மற்றும் விருந்தினருக்கு தொண்டாற்றுவதற்கான வழிமுறையாகவும் இருந்தது.

அல்லாஹ்வின் திருப்திக்காக விருந்தினர்களின் தொண்டிற்கான உரிமையை செலுத்தக்கூடிய அந்த மக்கள் எத்துணை நற்பேறு பெற்றவர்களாக உள்ளனர்! அடுத்து அந்த விருந்தினர்களும் எப்படிபட்டவர்கள் என்றால், அவர்கள் காலத்தின் இமாம் அழைத்ததனால் வந்துள்ளனர். மேலும் அவர்கள் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களின் கூற்றுகளை கேட்பதற்காக வந்துள்ளனர். மேலும், அந்த விருந்தினர்கள் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறவேண்டும் என்ற ஆசையில் வந்துள்ளனர்.

ஆக, மார்க்கத்திற்காக வரக்கூடிய விருந்தினர்களுக்கு அல்லாஹ்வை மகிழ்விப்பதற்காக தொண்டாற்றக்கூடிய அந்த அனைத்து தன்னார்வலர்களும் மிகவும் நற்பேறு பெற்றவர்கள் ஆவர்.

பெரும் எண்ணிக்கையில் மக்கள் இருக்கும்போது, பல்வேறு வகையான இயல்பு கொண்ட மக்களும் இருப்பர். அதிக கோபம் கொள்ளும் இயல்பு கொண்டவர்களும் சிலர் இருப்பர். சிலமுறை ஊழியர்களிடம் கடுமையுடன் உரையாடுகின்றனர். அல்லது கடுமையுடன் ஒரு பொருளை கேட்கின்றனர். ஆனால், ஊழியரின் பணி என்னவென்றால் அவர் ஆண் ஊழியராக இருக்கட்டும். பெண் ஊழியர்களாக இருக்கட்டும். அவர்கள் எவருடனும் கடுமைகாட்டக் கூடாது. கடுமையுடன் பேசக்கூடியவர்களிடம் கடுமையுடன் பதிலளிக்கக் கூடாது. மாறாக, சிரித்த முகத்துடன் பதில் கொடுக்க வேண்டும். (அந்த விருந்தினரின்) தேவையை நிறைவேற்ற முடியுமென்றால், நிறைவேற்றுங்கள். இல்லையென்றால் மென்மையுடனும், அன்புடனும் வருத்தத்தை தெரியப்படுத்துங்கள் அல்லது விருந்தினர்களின் பிரச்சனைகளை தீர்க்கின்ற தமது உயர் அதிகாரியிடம் கொண்டு செல்லுங்கள். சிலமுறை இந்த பணி மிகவும் கடினமாகிவிடுகிறது. ஆனால், இறை திருப்தியைப் பெறுவதற்காக இந்தப் பணியை செய்ய வேண்டும். உங்களது உணர்வுகளையும், நாவையும் கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். அதேபோன்று, ஊழியர்கள் தங்களுக்குள்ளும் பரஸ்பரம் தமது நாவுகளை ஒருவர் மற்றவரிடம் மென்மையாக பயன்படுத்த வேண்டும். அதிகாரிகளும், கண்காணிப்பாளர்களும் தமது உதவியாளர்களுடன் மென்மையான சொற்களில் உரையாட வேண்டும். ஒருவரிடம் ஏதாவது தவறு ஏற்பட்டுவிட்டாலும் கூட அன்புடன் அவருக்கு புரிய வையுங்கள். இந்த தன்னார்வலர்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக வந்துள்ளனர் என்பதை அதிகாரிகள் உணர்ந்திருக்க வேண்டும். அவர்கள் ஒரு குறிப்பிட்டத் துறையில் பயிற்சி பெற்றவர்கள் இல்லையென்றாலும், தொண்டாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் தன்னலமற்றவர்களாக திகழ்ந்து தொண்டாற்றுகின்றனர். எனவே அவர்களை கண்ணியப்படுத்தப்பட வேண்டும்.

அனைவரும் பரஸ்பரம் இணைந்து பணி செய்கின்ற நற்பேறை அல்லாஹ் வழங்குவானாக. நாம் இந்தத் தொண்டை தியாக உணர்வுடன் செய்யவேண்டும் என்ற புரிதல் அதிகாரிகளிடமும், உதவியாளர்களிடமும் இருக்கும்போதுதான் அந்த உணர்வு உருவாகும். விருந்தினர்கள் தவறாக நடந்து கொள்ளும்போது, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தொண்டு மற்றும் தியாகத்திற்கான உயர்தரத்தை நிலைநாட்டினார்கள். இது தொடர்பாக, ஓர் அறிவிப்பில் வருகிறது. முஸ்லிம் அல்லாத ஒரு விருந்தினர் வருகின்றார். அவருக்கு உணவு பரிமாறப்படுகிறது. அவருக்கு உறங்குவதற்கு இரவில் படுக்கை வழங்கப்படுகிறது. இரவில் அதிகம் உண்டதன் காரணமாக அல்லது வேறுஏதோ காரணத்தால் அவரது வயிற்றில் கோளாறு ஏற்பட்டுவிட்டது அல்லது வேண்டுமென்றே தொல்லை கொடுக்க வேண்டும் என்பதற்காக அவர் இவ்வாறு செய்கிறார். அதாவது, அவர் படுக்கையை அசுத்தப்படுத்திவிட்டு காலையில் சென்றுவிட்டார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரின்

இந்த செயலை தவறாக கருதவில்லை. மாறாக, தண்ணீர் கொண்டு வரச் செய்தார்கள். மேலும், தாம் சுயமே அதனை சுத்தப்படுத்துவதில் ஈடுபட்டுவிட்டார்கள்.

சஹாபிகள் கூறுகின்றனர்: தாங்கள் ஏன் சிரமமப்படுகின்றீர்கள்? தொண்டர்களாகிய நாங்கள் இருக்கின்றோம். எங்களை அதனை கழுவுவதற்கு விடுங்கள் என்று நாங்கள் கூறிய பிறகும் அன்னார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர் எனது விருந்தினராக இருந்தார். எனவே, நானே இந்த பணியை செய்துகொள்வேன்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 295, பதிப்பு 1985)

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் மற்றும் மறுமை நாளின் மீது நம்பிக்கை கொண்டவர் தமது விருந்தினரை கண்ணியப்படுத்துகின்றார். (ஸஹீஹுல் புகாரி,கிதாபுல் அதப்,)

எனவே, நமது அனைத்து தன்னார்வலர்கள், ஆண் ஊழியர்கள் மற்றும் பெண் ஊழியர்களின் கடமை என்னவென்றால், மார்க்கத்திற்காக வருகின்ற விருந்தினர்களுக்கு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்கு, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் குரலுக்கு செவிமடுத்து வருகை தரும் விருந்தினர்களுக்கு நாம் தியாகம் செய்து கூட தொண்டாற்ற வேண்டும். உயர்ந்த மனப்பான்மையை எப்போதும் வெளிப்படுத்துங்கள். மனமகிழ்வுடன், முகத்தில் எந்த வகையான அதிருப்தியின் அடையாளத்தையும் வெளிப்படுத்தாமல் தொண்டாற்றுங்கள். இந்த உணர்வு அல்லாஹ்வின் அருளால் நமது ஊழியர்களில் பெரும்பாலாரிடம் உள்ளது. இந்த உணர்வுடன் அனைத்து ஊழியர்களும் பணி செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. பல்வேறு துறைகளுக்கு நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் எப்போதும் இதனை நினைவிற் கொள்ளுங்கள். அதாவது, அல்லாஹ்வின் அருளினாலேயே உங்களுக்கு தொண்டாற்றும் வாய்ப்பு கிடைத்து வருகிறது. எனவே அதிகாரியாக அல்லாமல் தொண்டராக திகழ்ந்து உங்களது கடமைகளை நிறைவேற்றுங்கள். உங்களது உயர் நல்லொழுக்கத்திற்கான முன்னுதாரணத்தை நிலை நாட்டுங்கள். அவ்வாறு செய்தால், உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்களும், உதவியாளர்களும் உயர் நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவார்கள். அல்லாஹ் அனைவருக்கும் அதற்கான நற்பேறை வழங்குவானாக.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் விருந்தினர்களுடன் நல்லமுறையில் நடப்பது தொடர்பாக பல்வேறு சந்தர்ப்பங்களில் அறிவுரை வழங்கியுள்ளார்கள்.

ஒரு சந்தர்ப்பத்தில் கூறினார்கள்: பாருங்கள்! ஏராளமான விருந்தினர்கள் வந்துள்ளனர். அவர்களில் சிலரை நீங்கள் அறிவீர்கள். சிலரை அடையாளம் கண்டுள்ளீர்கள் சிலரை அறிவதில்லை. எனவே அனைவரையும் கண்ணியத்திற்குரியவராக கருதி தொண்டாற்றுவதே சிறந்ததாகும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 6, பக்கம் 226)

எனவே, இந்த வழிமுறையை எப்போதும் எல்லா ஊழியர்களும், குறிப்பாக மக்களுடன் நேரடியாக தொடர்பில் உள்ள ஊழியர்கள் கருத்தில் கொள்ள வேண்டும். குறிப்பாக, விருந்து உபசரிப்பு துறையிலும், உணவு பரிமாறும் தொண்டில் இருப்பவர்களும் மிகவும் பேணுதலுடன் இதன்படி அமல் செய்யுங்கள்.

இந்த வருடம் கோவிட் காரணமாக ஏராளமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்க நேரிடும். எனவே அதுபோன்ற ஏற்பாடுகளை செய்ய வேண்டும். மேலும், எனது கருத்தின்படி சம்பந்தப்பட்ட துறை இந்த ஏற்பாட்டை செய்வதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதாவது, உணவுக்கான நேரத்தில் அதிகமான மக்கள் அதிக நேரம் அமர்ந்து கொண்டு இருக்கக் கூடாது. மேலும் விரைவாக மக்கள் உணவு உண்டுவிட்டு உணவுக் கூடாரத்தை விட்டு வெளியேறிவிடும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். விருந்தினர்களும் இந்த விஷயத்தை கருத்தில் கொள்ள வேண்டும். மேலும், நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

உணவு உண்ணும்போது நிர்பந்தமாகும். ஆனால், பொதுவாக நான் கூறியதுபோன்று மாஸ்க் அணிந்து இருப்பதை கடைபிடித்து வாருங்கள். உணவு உண்ணும்போது கூட மிகக் குறைவாக (தேவைக்கு) பேசுங்கள். உரையாடுங்கள். அமைதியாக உணவு உண்பதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும் விரைவாக முடித்துவிட்டு புறப்பட்டுவிடுங்கள். உங்களையும் கடினத்தில் ஆழ்த்தாதீர்கள். அமைப்பையும் கடினத்தில் ஆழ்த்தாதீர்கள்.

ஊழியர்களுக்கு நான் சில அடிப்படையான விஷயங்களைக் கூறிவிட்டேன். விருந்தினர்களுக்கு சேவையாற்றுவதன் பக்கம் அவர்களுக்கு நான் கவனமூட்டியும் விட்டேன்.

இனி விருந்தினர்களும் சில விஷயங்களை கேட்டுக் கொள்ளுங்கள். விருந்தினர்கள் விருந்து உபசரிப்பவர்களுக்கு அசாதாரண, அவசியமற்ற சுமையை கொடுக்கக் கூடாது என்ற இஸ்லாத்தின் இந்த போதனையை விருந்தினர்கள் புரிந்து கொண்டால், அதை பேணினால் பின்னர் அன்பும், நேசமும் மிக்க சூழல் நிலைத்திருக்கும்.

விருந்தினர்கள், விருந்து உபசரிப்பவர்களிடம் தவறான எதிர்பார்ப்புகள் அல்லது தேவையை விட அதிகமான எதிர்பார்ப்புகளை வைக்கும்போது, சிக்கல் உருவாகிவிடுகின்றது. எனவே, தேவைக்கு அதிகமான எதிர்பார்ப்புகளை விருந்தினர்கள் வைக்கக் கூடாது. இந்த நிலை உருவானால், பின்னர் வீட்டில் இருப்பவர்களும் வசதியாக இருப்பார்கள். மேலும் எவர்களிடம் விருந்தினர்களுக்கான ஏற்பாடு உள்ளதோ அவர்களும், விருந்தினர்களும் வசதியாக இருப்பார்கள். எனவே இந்த விஷயத்தை எப்போதும் கருத்தில் கொள்ளுங்கள். நமது சகோதரர்களும், சகோதரிகளும் தாங்கள் நல்ல உயர் பொறுப்புகளில் இருந்தபோதிலும் விருந்தினர்களுக்கு தொண்டாற்றுவதற்காக தங்களை அர்பணித்துள்ளார்கள். எனவே ஜமாஅத் அமைப்பின் கீழ் தங்கியுள்ள விருந்தினர்கள் அந்த ஊழியர்களுக்கு நன்றி செலுத்துபவர்களாக இருக்க வேண்டும்.

சில முறை உணவு விருந்தினர்களின் விருப்பத்திற்கு ஏற்ப உணவு சமைக்கப்படுவதிலலை. ஆனால், ஜல்ஸாவின் நாட்களில் ஜமாஅத்தின் மரபுகளுக்கேற்ப பொதுவாக உருளைக்கிழங்குடன் இறைச்சியும், பருப்பும் சமைக்கப்படுகிறது என்பதை எல்லா அஹ்மதிகளும் அறிவர். எனவே விருந்தினர்களின் விருப்பத்திற்கு ஏற்ப உணவு கிடைக்காவிட்டாலும் கூட மகிழ்ச்சியுடன் (கிடைத்ததை) சாப்பிட்டுக் கொள்ள வேண்டும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: விருந்து உபசரிப்பு செய்பவரின் சார்பாக கொடுக்கப்பட்ட உணவை விருந்தினர், மகிழ்ச்சியுடன் உண்டு கொள்ள வேண்டும். (முஸன்னத் அஹ்மது பின் ஹன்பல், தொகுதி 5, பக்கம் 204, ஹதீஸ் 15048, பதிப்பு ஆலிமுல்

குதுப் பெய்ரூத் 1998)

கடந்த ஆண்டுகளில் இவ்வாறு நடைபெற்று வந்தது. அதாவது ஒருவர் (ஜமாஅத்தின் விருந்தினர் இல்லம் எனும்) லங்கர் கானாவிலிருந்து உணவு உண்ணவில்லையென்றால் அல்லது அவருக்கு அந்த உணவு பிடிக்கவில்லையென்றால், இங்கு தற்காலிகமாக ஜல்ஸாவின் ஒரு பகுதியில் நடத்தப்படும் கடைவீதிகளுக்கு சென்று ஏதாவது சாப்பிட்டுக் கொள்வார். இந்தமுறை அதுபோன்ற கடைவீதிகளுக்கான ஏற்பாடுகள் இல்லை. எனவே பல்வேறு வகையான உணவுகளுக்கான விருப்பம் கொண்ட மக்கள் அல்லாஹ்வின் திருப்திக்காக மனமகிழ்ச்சியுடன் கிடைப்பதை உண்டு கொள்ளவேண்டும். ஆயினும் நான் ஸியாஃபத் (விருந்து உபசரிப்புத்) துறையினரிடம் கூறுவேன். நீங்கள் நல்ல (சுவையான) உணவை சமைப்பதற்கு முழு முயற்சி செய்யுங்கள். இப்படிபட்ட (உணவை விரும்பாத) சிலர் இருக்கலாம். ஆனால், சில முறை அந்த சில மக்களும் பிரச்சனைகளுக்கு காரணமாகிவிடுகின்றனர். நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துவது என்பது வெறும் ஊழியர்களின் பணி மட்டுமல்ல. மாறாக, கலந்து கொள்ளக்கூடிய ஒவ்வொருவரின் பணியும் ஆகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை)அவர்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்பவர்களிடம் கூறினார்கள்:

நல்லொழுக்கத்தை வெளிப்படுத்துங்கள். ஒருவர் மற்றவரை கருத்தில் கொள்ளுங்கள்.

(ஷஹாதத்துல் குர்ஆன், ரூஹானி ஹஸாயின் தொகுதி 6, பக்கம் 394)

தனது மார்க்க, ஆன்மீக தாகத்தை தணித்துக் கொள்வதற்காகவே இந்த ஜல்ஸாவில் அவர் கலந்து கொள்கிறார் என்பதை (ஜல்ஸாவில்) கலந்து கொள்ளும் ஒவ்வொரும், எப்போதும் கருத்தில் கொள்ள வேண்டும். அந்த விஷயத்தை பெறுவதற்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த விஷயத்தை எப்போதும் கண் முன்னால் நிறுத்திக் கொள்ளுங்கள்.

அதாவது, இந்த ஜல்ஸா முற்றிலும் அல்லாஹ்விற்கான ஜல்ஸா ஆகும். எனவே சின்னச் சின்ன விஷயங்களில் எவ்வகையிலும் அமைதியின்மையையும். பகைமையையும் வெளிப்படுத்தக் கூடாது. ஊழியர்களும் மனிதர்கள் ஆவர். ஒருவேளை அவர்களிடமிருந்து ஏதாவது அநீதி வெளிப்பட்டுவிட்டால் அதனை பொருட்படுத்தக் கூடாது. உங்களது ஒழுக்கத்தை சரிசெய்து கொள்வதற்கு இது சிறந்த வழிமுறையாகும். சிலமுறை தங்களுக்குள் பரஸ்பரம் யார்புறம் இருந்தாவது, ஒன்று விருந்தினர்களிடமிருந்து அல்லது ஊழியர்களிடமிருந்து ஏதாவது ஒரு விஷயம் பிறரை கோபமூட்டுவதற்கு காரணியாக அமைந்துவிடும் சூழல் உருவாகிவிடுகிறது என்பது சரிதான். ஆனால், அதை பொருட்படுத்தாமல் மனிதன் அந்த இடத்திலிருந்து சென்றுவிட்டு சண்டையிடாமல் இருப்பதுதான் உயர் நல்லொழுக்கம் ஆகும். இளைஞர்களிடம் சிலமுறை அதுபோன்ற சூழல் உருவாகிவிடுகிறது. எனவே, எப்போதும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அதாவது, நாம் எந்த நோக்கத்திற்காக இங்கு ஒன்றுகூடியுள்ளோமோ அது மாபெரும் நோக்கமாகும். தமது ஆன்மீக தாகத்தை தணிப்பதே நோக்கமாகும். தமது மார்க்க அறிவை அதிகரித்துக் கொள்வதே (அந்த) நோக்கமாகும். அல்லாஹ்விற்குரிய உரிமைகள் மற்றும் அடியார்களுக்குரிய உரிமைகளை செலுத்துவதற்குரிய வழிமுறைகளை கற்பதே (அந்த) நோக்கம் ஆகும். எனவே இவை நோக்கமாக இருக்கும் என்றால், அதற்காக குறைந்தபட்சம் தமது உணர்ச்சிகளை தியாகம் செய்ய வேண்டும் (கட்டுப்படுத்த வேண்டும்). மேலும், அல்லாஹ்விடம் துஆவின் மூலமாகவும் உதவி வேண்ட வேண்டும். இந்த உணர்வு வளர்ந்துவிடும்போது நாவுகளுக்கு இறைவனை நினைவுகூர்வதன் பக்கம் கவனம் இருக்கும்.தவ்பா மற்றும் இஸ்திக்ஃபார் பக்கம் கவனம் ஏற்படும்போது, பின்னர் ஒருவரிடமிருந்து ஏதாவது துன்பம் ஏற்பட்டாலும் கூட மன்னிப்பு மற்றும் பொறுத்துக் கொள்ளுதல் போன்ற பண்புகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, இந்த நாட்களில் இந்த விஷயத்தை நினைவிற்கொள்ளுங்கள். நாம் அல்லாஹ்விற்காக நமது வீட்டை துறந்து, பயணம் செய்து இங்கு வந்துள்ளோம்.

பயணத்திற்கான துஆவைக் கற்றுக் கொடுத்தவாறு ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்: அல்லாஹ்வே! நாங்கள் உன்னிடம் இந்த பயணத்தில் நன்மையையும், இறையச்சத்தையும் விரும்புகிறோம். உனக்கு விருப்பமான நல்ல அமல்கள் செய்வதற்குரிய நற்பேறை நீ எங்களுக்கு வழங்கவாயாக.

(ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஹஜ், ஹதீஸ் எண்:3275)

எனவே நாம் இவ்வாறு துஆ செய்து கொண்டிருக்கும்போது, அல்லாஹ் நாம் இங்கு தங்குவதையும், பயணத்தையும் அருட்களால் நிறைத்துவிடுவான். எனவே இந்த நாட்களை துஆக்கள் மற்றும் இறைவனை நினைவுகூர்வதால் நிறைத்துவிடுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் நமக்கு எல்லா சந்தர்ப்பங்களுக்கும் உரிய துஆவை கற்று கொடுத்துள்ளார்கள். சில மக்கள் தமது குடும்பங்களைத் துறந்து ஜல்ஸாவின் அருட்களிலிருந்து பயன்பெறுவதற்காக வந்துள்ளனர். அவர்களுக்கு, தமது குடும்பத்தினரைப் பற்றிய கவலையும் இருக்கும். எனவே அன்னார் (ஸல்) அவர்கள், (அந்த மக்கள்) இந்த துஆவை செய்யும் படி கூறினார்கள்:

எங்களது இறைவா! பயணத்தின் கடினங்களிலிருந்தும், விரும்பத்தகாத, நிம்மதியிழக்கச் செய்யும் காட்சிகளிலிருந்தும், செல்வம் மற்றும் குடும்ப விவகாரங்களில் ஏற்படும் தீய விளைவுகளிலிருந்தும், விரும்பத்தகாத மாற்றங்களிலிருந்தும் நான் உன்னிடம் அடைக்கலம் தேடுகிறேன். (ஸஹீஹ் முஸ்லிம், கிதாபுல் ஹஜ், ஹதீஸ் எண்: 3275)

இது மிகவும் முழுமையான துஆ ஆகும். பயணத்தில் எல்லா வகையிலும்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

தம்மை பாதுகாத்துக் கொள்வதற்கான துஆ ஆகும். குடும்பத்தினர் அல்லாஹ்வின் பாதுகாப்பில் இருப்பதற்கான துஆவும் ஆகும். இதுபோன்ற சிந்தனையுடன் கூடிய துஆக்களால் உங்களது நாவுகளை ஈரமாக்கிக் கொண்டு ஒவ்வொரு ஆணும், பெண்ணும் (ஜல்ஸாவில்) நடமாடும்போது எங்கு உள்ளங்களின் அமைதிக்கான ஏற்பாடுகள் நிகழ்ந்து கொண்டிருக்குமோ, அங்கு அல்லாஹ் எல்லா தீய காட்சிகளிலிருந்தும் (அவர்களை) பாதுகாத்து வைத்திருப்பான்.

இன்றைய நாட்களில், கோவிட் (தொற்றின்) காரணமாக கவலையும் உள்ளது. துஆவின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அல்லாஹ் இங்கு கலந்து கொள்பவர்களையும் பாதுகாப்பாக வைப்பானாக. வீடுகளில் அமர்ந்திருப்பவர்களையும் அல்லாஹ் பாதுகாப்பானாக.

எனவே, பொதுவான துஆக்களுடன் இந்த நாட்களில் தரூத் மற்றும் ஸலவாத்தையும் குறிப்பாக ஓதி வரவேண்டும். அதேபோன்று தொழுகைகளுக்கான நேரங்களில், தொழுகைகளுக்கு சென்றுவிடுங்கள். வெளியில் பேச்சுகளில் நேரத்தை வீணடிக்காதீர்கள். அதேபோன்று, தொழுகைக்கான நேரங்களில் டியூட்டி இல்லாத ஊழியர்களும் ஜமாஅத்தாக தொழுகையை நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதேபோன்று, ஜல்ஸா நிகழ்ச்சிகளின்போது மாநாட்டுத் திடலில் அமர்ந்து சொற்பொழிவுகளை கேட்பதற்கு (ஜல்ஸாவில்) கலந்து கொள்ளும் அனைவரும் முயற்சி செய்யுங்கள்.

சொற்பொழிவாளர்கள், மிகவும் உழைத்து சொற்பொழிவுகளை தயார் செய்துள்ளனர். அவற்றிலிருந்து அறிவார்ந்த மற்றும் ஆன்மீக பயன் கிடைக்கின்றது. எனவே எவர் நல்ல சொற்பொழிவு நிகழ்த்துகிறார்? எவர் நல்ல சொற்பொழிவாளர்? என்று மட்டும் பார்க்காதீர்கள். சொற்பொழிவின் கருத்து என்ன? அதில் எவ்வளவு நன்மை உள்ளது? என்பதை பாருங்கள். பொதுவாக, காலத்தின் தேவைகளை அடிப்படையாக கொண்ட தலைப்புகளிலேயே சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. மிகவும் கவனத்துடன் கேட்கப்பட்டால், உள்ளத்தில் உருவாகிக் கொண்டிருக்கும் ஏராளமான கேள்விகளுக்கு பதில்கள் கிடைத்துவிடும்.

எனவே சொற்பொழிவுகளை மிகவும் கவனத்துடன் அமர்ந்து கேளுங்கள். இந்தமுறை நான் கூறியது போன்று கடைவீதிகள் இல்லை. ஆனால், ஜல்ஸா நிகழ்ச்சிகளின் இடைவேளையின்போது பல்வேறுதரப்பட்ட கண்காட்சிகள் வைக்கப்பட்டுள்ளன. அவை சிறிய அளவிலானதாக உள்ளன. இருப்பினும் இந்த முறை அங்கு செல்லுங்கள். அவற்றை காணுங்கள். அவற்றிலிருந்து பயன்பெறுங்கள். இன்ஷாஅல்லாஹ், நிலைமைகள் சரியான பிறகு,கண்காட்சிகளும் பெரிய அளவில் நடத்தப்படும். மேலும் மற்ற நிர்வாகமும் அதேபோன்று நடக்கத் துவங்கிவிடும்.

இதனையும் கருத்தில் கொள்ளவேண்டும். அதாவது, இந்தமுறை வறண்ட வானிலையாகவும் உள்ளது. மழையும் பொழியவில்லை. எனவே கடந்த ஆண்டைப் போன்று, கார்களை பார்க்கிங் செய்வதில் சிக்கல்களை சந்திக்க நேரிடாது என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இன்ஷாஅல்லாஹ். கடந்த ஆண்டு மழையின் காரணமாக மிக அதிகமான பிரச்சனைகள் ஏற்பட்டன. இருப்பினும், இந்த வருடம் சிறப்பான ஏற்பாடும் செய்யப்பட்டுள்ளது. டிரக் போன்றவற்றிற்கான சிறந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், அடிப்படையான நிரந்த ஏற்பாடுகளுடன் கழிவுநீரை வெளியேற்றுவதற்காக நிபுணர்களின் உதவியுடன் பெரிய அளவில் பணி நடந்துள்ளது. கடந்த மாதங்களில் மழையும் பொழிந்திருந்தது. அப்போது, கழிவு நீர் நல்ல முறையில் வெளியேற்றப்பட்டது. இதிலிருந்து இன்ஷா அல்லாஹ் எதிர்காலத்திலும் இது மிகவும் பயனுள்ளதாக நிரூபணமாகும் என்பது தெரிகிறது. எவ்வாறு இருப்பினும், இந்த வருடம் இன்றைய நாட்களில் வறண்ட வானிலைக்கான முன்னறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. ஆனால், கார் பார்க்கிங்கில் சிலமுறை அதிக கார்கள் வருவதன் காரணமாக நிர்வாகத்திற்கும் சில கஷ்டங்களை சந்திக்க நேரிடுகிறது. ஆனால், கார்களில் வருபவர்களின் ஒத்துழைப்பு கிடைத்தால் எளிமையாக எல்லாவற்றையும் கட்டுப்படுத்திவிடலாம். எனவே, எந்த சிக்கலும் ஏற்படாமல் இருப்பதற்கு பொறுமை மற்றும் தைரியத்துடன் கார்களில் வருபவர்கள் போக்குவரத்து அமைப்புடன் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

இதேபோன்று, நான் ஒவ்வொரு ஆண்டும் கூறுவதைப் போன்று, கழிப்பறையை பயன்படுத்துபவர்களும், குளியலறையை பயன்படுத்துபவர்களும் தூய்மையையும் கருத்தில் கொள்ளுங்கள். குறைவாக மழை பொழிந்ததன் காரணமாக, அரசாங்கமும் தண்ணீரை குறைவாக பயன்படுத்துவதன் பக்கம் கவனமூட்டியுள்ளது. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துங்கள். அதேபோன்று, காய்ந்த புற்கள் மிக எளிதாக இங்கு தீப்பற்றிவிடும். அது தொடர்பாகவும் குறிப்பாக எச்சரிக்கையாக இருங்கள். எந்த வகையிலும் கவனமற்று இருப்பது கஷ்டத்தை ஏற்படுத்தி விடும். நம்மவர்களுக்கோ அல்லது அந்நியர்களுக்கோ பாதிப்பபை ஏற்படுத்திவிடும். பாதுகாப்பு ஏற்பாடுகளின் அம்சத்தின் அடிப்படையிலும் அனைவரும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். சூழலின் மீது ஆழமான பார்வை வையுங்கள். சந்தேகத்திற்குரிய ஏதாவது ஒரு பையோ அல்லது ஏதாவது ஒரு பொருளோ கிடந்தால், உடனடியாக ஜமாஅத் அமைப்பிற்கு தகவல் கொடுங்கள். நிர்வாகமும், ஸ்கேனிங் செய்பவர்களும் அடையாள அட்டைகளை பரிசோதிக்கும்போது, மாஸ்கை கழற்றச் செய்து கார்டில் உள்ள புகைப்படத்திற்கு ஏற்ப முகம் இருக்கிறதா? இல்லையா? என்று பாருங்கள்.

அல்லாஹ் எல்லா தீங்கிலிருந்தும் எல்லாரையும் பாதுகாப்பாக வைப்பானாக. மேலும், தமது சிறப்பான அருட்களை வழங்கிக் கொண்டிருப்பானாக.

பின்னர், நான் மீண்டும் கூறுகின்றேன். இந்த நாட்களில் இறை தியானம் மற்றும் இறைவணக்கங்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். ஜமாஅத்தின் முன்னேற்றம் மற்றும் எதிரிகளிடமிருந்து பாதுகாப்பாக இருப்பதற்காக அதிகமாக துஆக்கள் செய்யுங்கள். சிறையின் கஷ்டங்களை அனுபவித்து வருகின்ற இறைவழிக் கைதிகளுக்காக துஆ செய்யுங்கள். அல்லாஹ் அவர்களின் விடுதலைக்கான ஏற்பாடுகளை விரைவாக செய்வானாக. ஜுமுஆ தொழுகையிலும், ஜுமுஆவிற்கு பிறகும்,மற்ற நாட்களிலும் சிறப்பான துஆக்களை செய்து வாருங்கள்.

நிறைவாக, ஜல்ஸா தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களின் சொற்களை முன்வைக்கின்றேன். அன்னார் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இந்த இறைமாநாட்டிற்காக பயணம் மேற்கொள்ளும் ஒவ்வொரு நபருடனும் இறைவன் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு மகத்தான நற்கூலியை வழங்குவானாக. மேலும் அவர்கள் மீது கருணை காட்டுவானாக. மேலும், அவர்களின் கஷ்டங்களையும், அவர்களின் துன்பத்திற்குரிய நிலைமைகளையும்

எளிதாக்கிவிடுவானாக. மேலும், அவர்களின் வேதனைகளையும், துன்பங்களையும் அகற்றிவிடுவானாக. மேலும் அவர்களுக்கு எல்லா துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பை வழங்குவானாக. மேலும், அவர்களின் வெற்றிகளுக்குரிய வழிகளை அவர்களுக்கு திறந்து கொடுப்பானாக. மேலும், மறுமை நாளில் தான் அருளும், கருணையும் புரிந்த அடியார்களுடன் அவர்களை எழுப்புவானாக.

இறைவா! கண்ணியத்திற்குரியவனே! அருளாளனே! கருணையாளனே! கஷ்டங்களை நீக்குபவனே! (எனது) இந்த அனைத்து துஆக்களையும் ஒப்புக் கொள்வாயாக. எங்களின் எதிரிகளுக்கு எதிராக ஒளிமயமான அடையாளங்களுடன் எங்களுக்கு வெற்றியை வழங்குவாயாக. எல்லா ஆற்றலும், வலிமையும் உனக்கே உள்ளது! ஆமீன். (மஜ்மூஆஃ இஷ்திஹாராத் தொகுதி 1, பக்கம் 342)

ஜல்ஸாவில் கலந்து கொள்ளக்கூடிய அனைத்து ஆண்களையும், பெண்களையும் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு வாரிசாக்குவானாக. சில மக்கள் ஜல்ஸாவில் கலந்து கொள்ளும் எண்ணத்துடன் வெளிநாடுகளிலிருந்து வந்துள்ளனர். ஆனால் இங்கு வந்து நோயாளி ஆகிவிட்டனர். சிலர் மிகவும் அதிக விருப்பத்துடன் கலந்து கொள்ள எண்ணியிருந்தனர். ஆனால், கலந்த கொள்ள முடியவில்லை. அல்லாஹ் அவர்களுக்கும், அவர்களின் எண்ணங்களுக்கான நற்கூலியை வழங்குவானாக. மேலும், அவர்களையும் இந்த துஆக்களுக்கு வாரிசுகளாக ஆக்கிவிடுவானாக.

தமிழாக்கம் :
மவ்லவி A. அப்துர் ரஹ்மான் தாஹிர்

* * * * *

**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெகானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM
JAYGON-WEST BENGAL 97348 44732

**(தஃப்ஸீரே கபீர்) முதல்பக்கத் தொடர்ச்சி**

ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கிலும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதாயிருக்கும்

(லூக்கா : அதிகாரம் 18 : வசனம்- 24,25)

இந்த சிந்தனை கொண்ட மக்களின் புறமிருந்து இந்த ஆட்சேபனை எழக்கூடும். அதாவது, உலகத்தைப் பற்றிய செய்திகளைப் படிப்பதால், சில மக்களின் ஈமானில் பலவீனம் உருவாகிவிடும் அபாயம் உள்ளது. எனவே முஸ்லிம்களுக்கு உலக வெற்றிகள் மற்றும் அரசாங்கத்திற்கான செய்தி ஏன் வழங்கப்பட்டது? இதற்குரிய பதில் என்னவென்றால், ஷைத்தானின் ஆதிக்கம் பலவீனமானவர்கள் மீதே உள்ளது. நம்பிக்கையாளர் உலகத்தில் ஈடுபட்டாலும், மார்க்கத்திலிருந்து கவனக்குறைவாக இருப்பதில்லை.

எனவே, இந்த இடத்தில் நாம் பலவீனமானவர்களை மட்டுமே எச்சரிக்கை செய்கின்றோம்.

உறுதியான ஈமான் கொண்டவர்களும் உலக(ப்பணிகளில்)த்தில் ஈடுபட்டு இரட்சிப்பிலிருந்து இழப்பிற்குரியவராக ஆகிவிடுவார் என்பதை ஒப்புக் கொள்ள முடியாது. இஸ்லாம் உலகை புறக்கணிப்பதற்கு போதனை வழங்கவில்லை. மாறாக, உலக பணிகளில் பங்கு பெற்றவாறு அதனை சீர்திருத்துவதற்கு கட்டளை வழங்கியுள்ளது.

நல்லவர்களை உலகிலிருந்து விலக்கி வைத்துவிட்டால், உலகின் சீர்திருத்தம் ஒருபோதும் நடைபெறமுடியாது என்பது வெளிப்படையாகும்.

உலகத்தின் மீது அதிகாரம் பெற்ற பிறகும் நீதியையும், இறையச்சத்தையும் நிலைநாட்டக்கூடிய மக்களின் கைகளில் உலகின் ஆட்சி வந்துவிடும்போதுதான் உலகின் சீர்திருத்தம் நடைபெற முடியும். மேலும், மற்றவர்களுக்கும் நல்ல முன்னுதாரணத்தை நிலைநாட்ட முடியும். பாருங்கள்! ஹஸ்ரத் நபி (ஸல்) மற்றும் அன்னாரின் சஹாபிகளின் கைகளில் உலகின் நிர்வாகம் வந்தபோது, அவர்கள் எந்த அளவிற்கு அதில் (உலகப் பணிகளில்) ஈடுபட்ட பிறகும் அதிலிருந்து தனித்திருப்பதற்கான முன்னுதாரணத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள்! எப்படிபட்ட மிகச் சிறந்த முன்னுதாரணத்தை நிலைநாட்டியுள்ளார்கள் என்றால், தற்போது 1300 ஆண்டுகள் கடந்துவிட்டன. அறிஞர் பெருமக்களின் உள்ளங்களை ஆச்சரியத்தில் ஆழ்த்திவிடுகிறது.

(தஃப்ஸீர் கபீர் தொகுதி 4, பக்கம் 236 காதியான் பதிப்பு 2010)

* * * * *

## 127 வது காதியான் ஆண்டு மாநாடு

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் 127 வது காதியான் ஆண்டு மாநாட்டினை 23,24,25 டிசம்பர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் உறுப்பினர்கள் இப்போதிருந்தே துஆக்கள் செய்தவாறு இந்த அருளுக்குரிய ஜல்ஸாவில் பங்கு பெறும் நிய்யத்துடன் ஏற்பாடுகளை தொடங்கி விடுங்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் இந்த இறை மாநாட்டிலிருந்து பயன் பெறுவதற்கான நற்பேறு வழங்குவானாக. மேலும் இந்த ஜல்ஸாவை எல்லா வகையிலும் வெற்றிகரமாக ஆக்குவானாக. மேலும் அது அருளுக்குரியதாக அமைவதற்கும், நல்ல ஆன்மாக்களின் நேர்வழிக்கு காரணியாக அமைவதற்கும் தொடர்ந்து துஆ செய்து வாருங்கள்.

(நாஸிர் இஸ்லாஹ் வ இர்ஷாத் மர்களியா, காதியான்)

* * * * *

## வருடாந்திர இஜ்திமாக்கள் 2022

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மூஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதியா, மஜ்லிஸ் அன்ஸாருல்லாஹ், மஜ்லிஸ் லஜ்னா இமாயில்லாஹ் ஆகிய கிளை அமைப்புகளுக்கான இஜ்திமாக்களை 21, 22, 23 அக்டோபர் 2022 (வெள்ளி, சனி, ஞாயிறு) ஆகிய தேதிகளில் நடத்துவதற்கு பரிவுகூர்ந்து ஒப்புதல் நல்கியுள்ளார்கள். ஜமாஅத் சகோதரர்கள் இதற்கேற்ப துஆக்கள் செய்தவாறு இந்த இஜ்திமாக்களில் பங்கு பெறுவதற்கு எல்லா முயற்சிகளையும் செய்யுங்கள்.

(சதர் மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, பாரத்)

* * * * *

**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில் ∴போன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)

✠ ஐவேளை தொழக்கூடிய மற்றும் திருக்குர்ஆன் ஓதக்கூடிய நாஸிராத் சிறுமிகளின் சரியான எண்ணிக்கை தெரிந்திருக்க வேண்டும்

✠ திருக்குர்ஆனைத் முறையாக ஓதுதல் மற்றும் [அதனை] சிறந்த முறையில் புரிதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட வேண்டும்.

✠ இஸ்லாத்தில் பெண்களின் உரிமைகள் தொடர்பான கருத்தரங்குகளை நடத்துங்கள். அதுபோன்ற சந்தர்ப்பத்தில் முஸ்லிம் அல்லாதவர்களையும் அழையுங்கள்.

✠ பெண் பத்திரிகையாளர்களுடன் தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை சிறந்த முறையில் அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

✠ குத்பா ஜுமுஆவிலிருந்து கேள்வி பதில் வடிவில் நிகழ்ச்சிகளை உருவாக்குங்கள்.

✠ லெஜ்னா இமாயில்லாஹ் USA சார்பாக ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் ஒரு மாடல் வில்லேஜிற்கான தொகை வழங்கப்பட வேண்டும்.

✠ உங்களது மஜ்லிஸே ஆமிலாவை செயல்மிக்க ஆமிலாவாக ஆக்குங்கள். [அதன்] உறுப்பினர்கள் நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்தினால், பின்னர் [மஜ்லிஸின்] ஏனைய உறுப்பினர்களும் அவர்களின் அடிச்சுவட்டின் வழி நடப்பார்கள்.

## அமீருல் மூஃமினீன் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களுடன் லெஜ்னா இமாயில்லாஹ் அமெரிக்காவின் தேசிய செயற்குழு உறுப்பினர்களின் ஆன்லைன் சந்திப்பு :

2021ஆம் ஆண்டு, ஆகஸ்ட் 29 ஆம் தேதி அன்று லெஜ்னா இமாயில்லாஹ் அமெரிக்காவின் தேசிய செயற்குழு உறுப்பினர்களுக்கு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களை ஆன்லைன் மூலம் சந்திப்பதற்கு நற்பேறு கிடைத்தது.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் இந்த சந்திப்பிற்காக இஸ்லாமாபாத் (டில்ஃபோர்ட்) அலுவலகத்தில் அமர்ந்திருந்தார்கள். அதேநேரம் லெஜ்னா இமாயில்லாஹ்வின் தேசிய செயற்குழு உறுப்பினர்கள் Maryland, அமெரிக்காவின் மஸ்ஜிது பைத்துர்ரஹ்மானிலிருந்து (அந்த சந்திப்பில்) கலந்து கொண்டார்கள்.

இந்த சந்திப்பின்போது, ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள், லெஜ்னா இமாயில்லாஹ்வின் அனைத்து செயற்குழு உறுப்பினர்களுக்கும் அவர்களது பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும், அவர்களின் துறைகளில் சிறப்பாக செயல்படுவதற்கு வழிகாட்டுதல்களை வழங்கினார்கள்.

ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் நாஸிராத் சிறுமிகளின் செயலரிடம் இவ்வாறு கூறினார்கள்:

ஐவேளை தொழக்கூடிய மற்றும் திருக்குர்ஆன் ஓதக்கூடிய நாஸிராத் சிறுமிகளின் சரியான எண்ணிக்கை தெரிந்திருக்க வேண்டும். திருக்குர்ஆனைத் முறையாக ஓதுதல் மற்றும் (அதனை) சிறந்த முறையில் புரிதல் ஆகியவற்றை ஊக்குவிக்கும் நிகழ்ச்சிகள் உருவாக்கப்பட வேண்டும்.

செகரட்டரி சாஹிபாவின் public affairs உடன் தொடர்புடைய பொறுப்புகளின் பக்கம் கவனமூட்டியவாறு ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: லெஜ்னாவின் பப்ளிக் ரிலேஷன் டிபார்ட்மென்ட் துறை மூலமாக இஸ்லாத்தின் பெண்களின் உரிமைகள் தொடர்பான கருத்தரங்கம் மற்றும் மாநாடுகளை நீங்கள் நடத்த வேண்டும். மேலும் அதுபோன்ற சந்தர்ப்பங்களில் முஸ்லிம் அல்லாதவர்களையும் அழைக்க வேண்டும். அதன் மூலம் உண்மையான இஸ்லாத்தின் போதனைகள் எவை? என்பது பற்றி அவர்களுக்கு தெரிய வந்துவிடும். மேலும், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் விவகாரங்கள் பற்றியும் அவர்களுக்கு தெரிய வரும்.

புதிய அஹ்மதி பெண்களுக்கான செகரட்டரி சாஹிபாவிடம் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்:

பல்வேறு தரப்பட்ட மக்களின் குடும்ப பின்னணிக்கு ஏற்ப அவர்களின் நல்லொழுக்க மற்றும் தர்பிய்யத் தேவைகளை நீங்கள் கருத்தில் கொள்ள வேண்டும். உங்களால் ஒரே திட்டத்தையும், நிகழ்ச்சியையும் செயல்படுத்த முடியாது. கிறித்தவ மார்க்கத்திலிருந்து இணையக்கூடிய பெண்களுக்கு திருக்குர்ஆன் பற்றியும், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றைப் பற்றியும் கூறுங்கள். புத்த மதத்திலிருந்தும், இந்து மதத்திலிருந்தும் சிலர் வந்து இணைகின்றனர். சிலர் முஸ்லிம்களிலிருந்தும், சிலர் அரேபிய பின்னணியிலிருந்தும் சிலர் வருகின்றனர். மேலும், சிலர் ஆசியாவைச் சார்ந்தவர்களும், இந்திய துணைக் கண்டத்தை சார்ந்தவர்களும் இருக்கின்றனர். இவ்வாறு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியான திட்டத்தை உங்களுக்கு வகுக்க நேரிடும்.

ஊடகங்களுக்கான செகரட்டரி சாஹிபாவிடம் ஹுஸுர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: நீங்கள் பெண் பத்திரிகையாளர்களுடன் தனிப்பட்ட தொடர்புகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை சிறந்த முறையில் அவர்களால் புரிந்து கொள்ள முடியும்.

தர்பிய்யத் செகரட்டரி சாஹிபாவிடம், கடந்த பத்து மாதங்களின் செயல்பாடுகள் மற்றும் எதிர்வரும் இரண்டு மாதங்களுக்காக திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சிகள் குறித்து ஹுஸுர் அவர்கள் விசாரித்த பிறகு, மஜ்லிஸே ஆமிலா உறுப்பினர்கள் முன்மாதிரியான பெண்களாகத் திகழ்வதற்கு அறிவுறுத்தியவாறு கூறினார்கள்: எல்லா விவகாரங்களிலும், பொறுப்பாளர்களும், உங்களுடைய தலைமையக ஆமிலா உறுப்பினர்களும் ஒரு முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டும். அவர்கள் ஐவேளை தொழுகைகளை முறையாக தொடர்ந்து நிறைவேற்றிவரும்போதும், தலைமையகத்தின் வழிகாட்டல்களை பின்பற்றி நடக்கும்போதும் தான் உங்களுக்கு நல்ல விளைவுகள் கிடைக்க முடியும். மஜ்லிஸ்களின் ஆமிலா முதல் தேசிய ஆமிலா வரை அனைத்து ஆமிலா உறுப்பினர்களும் செயல் மிக்கவர்களாக ஆகிவிட்டால் அதன் பொருள் உங்களுடைய 50 சதவிகிதம் அல்லது அதைவிட அதிக உறுப்பினர்கள் உங்களுடைய நிகழ்ச்சிகளிலும்,

செயல்பாடுகளிலும் பங்குபெறக் கூடியவர்களாக இருப்பர். எனவே, உங்கள் வீட்டிலிருந்து (பணியை) துவங்குங்கள். உங்களின் வீடு ஆமிலா ஆகும்.

இதன் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் தொடர்ந்து தர்பிய்யத் நிகழ்ச்சிகள் தொடர்பாக விசாரித்தார்கள். அப்போது, தர்பிய்யத் செகரட்டரி சாஹிபா கூறினார்: ஹுஸூர் அன்வர் அவர்களின் ஜுமுஆ குத்பாக்களை கேட்பதன் பக்கம்தான் தற்போது எங்களுக்கு அதிக கவனம் உள்ளது. ஹுஸூர் அன்வர் அவர்கள் ஜுமுஆ குத்பா வழங்கிய பிறகு, ஒவ்வொரு வாரமும் தர்பிய்யத் தொடர்பான இரண்டு கேள்விகள் லெஜ்னா சகோதரிகளுக்கு மத்தியில் போஸ்ட் செய்யப்படுகின்றன. குத்பாவில் இடம்பெற்றிருந்த தர்பிய்யத் அம்சங்களை அவர்களின் மனதில் பதியச் செய்யும் வகையில் அந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும்படி லெஜ்னா உறுப்பினர்களிடம் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், அவர்களை இந்த நிகழ்ச்சியில் தொடர்ந்து பங்குபெறச் செய்ய நாங்கள் முயற்சி செய்வோம் இன்ஷாஅல்லாஹ்.

அதற்கு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்: ஒருவேளை எனது ஒரு ஜுமுஆ குத்பா ஒரு குறிப்பிட்ட தர்பிய்யத் அம்சத்தின் அடிப்படையில் இல்லையென்றால் பின்னர் என்ன செய்வீர்கள்? ஏனென்றால் தற்போது இஸ்லாமிய வரலாற்றை பற்றியே அதிக குத்பாக்கள் உள்ளன.

அதற்கு, செகரட்டரி சாஹிபா கூறினார்:

அந்த குத்பாக்களிலும் ஏராளமான தர்பிய்யத் அம்சங்கள் அமைந்திருப்பதை நான் பார்த்துள்ளேன்.

அப்போது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள். மேலும் கூறினார்கள்:

ஆண்களுக்கான தர்பிய்யத் அம்சங்களின் குறிப்புகள் எப்படியாவது இடம்பெற்றுவிடுகின்றன. ஆனால், பெண்களாகிய உங்களுக்கு ஏதாவது தர்பிய்யத் அம்சம் கிடைத்துவிட்டால் அது மிகவும் நல்ல விஷயம் ஆகும். இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் கடின உழைப்புடன் பணி செய்து வருகிறீர்கள். பின்னர் ஹுஸூர் அன்வர் அவர்கள் வழிகாட்டல்களை வழங்கினார்கள். எனது கருத்தின்படி, நீங்கள் கேள்வி பதில் வடிவில் ஜுமுஆ குத்பாக்கள் நிகழ்ச்சிகளை உருவாக்க வேண்டும். அப்போதுதான், ஜுமுஆ குத்பா தொடர்பாக கேள்வி கேட்கப்பட்டால் அவர்கள் பதில் அளிப்பார்கள் அல்லது அந்த விஷயங்களை எடுத்துக் கூறும் லெஜ்னாக்களின் ஒரு குழுவினர் இருக்க வேண்டும்.

அந்த செகரட்டரி சாஹிபா கூறினார்: ஹுஸூர்! தற்போது நாங்கள் அப்படி செய்வதற்கே எண்ணம் கொண்டுள்ளோம். நாங்கள் ஒரு குழுவை உருவாக்கி அதில் லெஜ்னா சகோதரிகளாகிய நாங்கள் குத்பாவைக் குறித்து கலந்துரையாடுவோம் இன்ஷாஅல்லாஹ்.

அப்போது, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு, நல்லது! மாஷாஅல்லாஹ் என்று கூறினார்கள்.

அடுத்து, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) செகரட்டரி தர்பிய்யத் சாஹிபாவிற்கு தொடர்ந்து கவனமூட்டியவாறு கூறினார்கள்: தற்போது, உங்களிடம் immigrants மற்றும் asylum seekers லெஜ்னா சகோதரிகளின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. அவர்களில் பெரும்பான்மை மக்கள் படிப்பறிவு இல்லாத நபர்கள் ஆவர். எனவே, அவர்களுக்காவும், தனி வகையான நிகழ்ச்சிகளை உங்களுக்கு உருவாக்க நேரிடும். குறைவாக படித்த லெஜ்னா சகோதரிகளுக்காக உங்களால் எப்படிபட்ட நிகழ்ச்சிகளை வடிவமைக்க முடியும்? என்பதை நீங்கள் கவனிக்க வேண்டும். அவர்கள் அனைவரும் பல்வேறு வகையான சமூகத்துடன் தொடர்புடையவர்களாக உள்ளனர்.

செகரட்டரி கித்மதே கல்க் சாஹிபாவிடம் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியவாறு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் கூறினார்கள்; லெஜ்னா இமாயில்லாஹ் usa மனித இன தொண்டிற்காக பெரும் தொகையை செலவிட வேண்டும். லெஜ்னா இமாயில்லாஹ் usa- ஒவ்வொரு வருடமும் குறைந்தபட்சம் ஒரு மாடல் வில்லேஜ் (முன்மாதிரி கிராம) திட்டத்திற்காக தொகை வழங்க வேண்டும். அதன் மதிப்பீட்டுத் தொகை 90ஆயிரம் டாலர்கள் ஆகும். இந்த பொறுப்பை ஏற்பதற்கு நீங்கள் தயாராக உள்ளீர்களா?

அதற்கு, அந்த செகரட்டரி சாஹிபா, ஆம் என்று பதிலளித்தார். அல்லாஹ் உங்களுக்கு உதவி செய்வானாக என்று ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்.

இந்த சந்திப்பின் இறுதியில், இளம் சந்ததியினரை நமது கொள்கை மற்றும் மார்க்கத்துடன் எவ்வாறு இணைப்பது? என்று ஹுஸூர் அன்வர் அவர்களிடம் சதர் லெஜ்னா சாஹிபா வழிகாட்டல் வேண்டினார்கள். அதற்கு, பதில் அளித்தவாறு ஹுஸூர் அன்வர் அவர்கள் கூறினார்கள்:

மக்களுக்கு நினைவூட்டல் வழங்குவதும், அவர்களுக்கு அறிவுரை செய்வதும் உங்கள் கடமை ஆகும் என்று அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான். அவர்களுக்காக துஆவும் செய்யுங்கள். சிறிது காலத்திற்குப் பிறகு சோர்ந்து பின்வாங்கி விட வேண்டாம். நீங்கள் தைரியம் இழக்கக் கூடாது. அவர்கள் தங்களை அஹ்மதிகள் என்று கூறிவரும்வரையிலும், தங்களை ஜமாஅத்திலிருந்து விலக்கிக் கொள்ள விரும்பாத வரையிலும் நமது கடமை என்னவென்றால், அவர்களை அஹ்மதிய்யத்தின் மடியில் கொண்டு வருவதற்கு சாத்தியமான எல்லா முயற்சிகளையும் நாம் செய்ய வேண்டும். நமது (ஜமாஅத்) புத்தகங்களில் இவை தான் உள்ளது. மிக முக்கிய விஷயம் என்னவென்றால், திருக்குர்ஆனின் இன்ன இன்ன கட்டளைகள் உள்ளன என்று அவர்களிடம் கூறுங்கள். (இந்த வழிமுறை திருக்குர்ஆனில் உள்ளது.

பாருங்கள்! திருக்குர்ஆன் கூறுகிறது. வெட்கம் மிக்க ஆடையை அணியுங்கள். இது திருக்குர்ஆனின் கட்டயையாகும். ஹிஜாப் அணியுங்கள். பர்தா அணியுங்கள் என்று திருக்குர்ஆன் கூறுகிறது. அஹ்மதிய்யா ஜமாஅத் மட்டும் இதில் அழுத்தம் கொடுக்கவில்லை. மாறாக, இது திருக்குர்ஆன் கட்டளையாகும். இன்னும் பல கட்டளைகளும் உள்ளன. அவற்றில் திலாவத் செய்தல் மற்றும் ஐவேளை தொழுகைகளை நிறைவேற்றுதல் போன்ற கட்டளைகளும் அடங்கும். எனவே இந்த விஷயங்களை நீங்கள் பேண வேண்டும் (என்று கூறுங்கள்).

எனவே அன்புடனும், மென்மையுடனும் இதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டு வாருங்கள். நீங்கள் அவர்களின் நலம் விரும்பிகள். நீங்கள் செய்பவையெல்லாம் அவர்களின் நலனுக்காவே ஆகும் என்ற உணர்வு அவர்களுக்கும் ஏற்பட வேண்டும். நீங்கள் சமூகத்தின் தீமைகளிலிருந்து அவர்களை பாதுகாப்பதற்காக முயற்சி செய்கின்றீர்கள்

என்ற உணர்வும் அவர்களுக்கு ஏற்பட வேண்டும்.

அடுத்து, அவர்களுக்காக துஆவும் செய்யுங்கள். பின்னர், ஒருமுறை அவர்கள் இதை உணர்ந்துவிட்டால் அதன் பிறகு ஒருநாள் உங்கள் கூற்றை ஏற்கத் தொடங்கிவிடுவார்கள்.

எனவே, ஒருமுறை அல்லது மூன்று, நான்கு முறை கவனமூட்டிவிட்டு நீங்கள் சோர்ந்துவிடக் கூடாது. மாறாக, அவர்களை பின்தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டும். கவனமூட்டிக் கொண்டே இருக்க வேண்டும். இதுவே உங்கள் பணியாகும். இந்தக் கட்டளைதான் திருக்குர்ஆனில் வழங்கப்பட்டுள்ளது إِنَّمَا أَنتَ مُذَكِّرٌ அந்த நம்பிக்கையாளர்களுக்கு மீண்டும் மீண்டும் அறிவுரை செய்து கொண்டு இருப்பீராக. இஸ்லாத்தின் அழகிய போதனைகளை அவர்களுக்கு கூறிக் கொண்டே இருப்பீராக என்ற இந்தக் கட்டளை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

நீங்கள் தேசிய, மண்டல, உள்ளூர் அளவிலான உங்களுடைய மஜ்லிஸே ஆமிலாவை செயல் மிக்கதாக ஆக்கிவிட்டால், அவர்கள் அனைவரும் உங்களது நிகழ்ச்சிகள் மற்றும் வழிகாட்டல்களுக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருந்தால் அதன் பொருள் இதுவாகும். அதாவது, நீங்கள் 50 விழுக்காடு அல்லது அதையும் விட கூடுதலான இலக்கை அடைந்துவிட்டீர்கள் என்பதாகும். எனவே அதற்கு முயற்சி செய்யுங்கள். மேலும், ஆமிலா உறுப்பினர்கள் உங்களுடைய நிகழ்ச்சிகளுக்கு ஏற்ப செயல்படுகின்றார்களா? இல்லையா? என்பதன் பக்கம் கவனம் செலுத்துங்கள். அவர்கள் தங்களது நல்ல முன்மாதிரியை வெளிப்படுத்தினால், ஏனைய உறுப்பினர்களும் அவர்களின் அடிச்சுவட்டின் வழிநடப்பார்கள்.

நல்ல முன்மாதிரியை நிலைநாட்ட வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. பின்னர் நாம் நல்ல விளைவுகளை எதிர்பார்க்கவும் முடியும்.

அல்லாஹ் (உங்கள் அனைவரின்) பாதுகாவலனாகவும், உதவியாளனாகவும் இருப்பானாக.

அஸ்ஸலாமு அலைக்கும் வ
ரஹ்மத்துல்லாஹி வ பரக்காதஹு

(நன்றி: அல்ஃபஸல்
இன்டர்நேஷனல்,செப்டம்பர் 17,2021)

* * * * *

## 12-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஆஸ்திரேலியா, தீவுகள் என எல்லா இடங்களிலும் நாம் சென்றடைய வேண்டும். எல்லா இடத்திலும், எல்லா கண்டங்களிலும், எல்லா நாடுகளிலும், எல்லா நகரங்களிலும், எல்லா ஊர்களிலும், எல்லா கிராமங்களிலும், உலகின் ஒவ்வொரு நபர் வரையிலும் இஸ்லாத்தின் அழகிய போதனையை நாம் எட்ட வைக்க வேண்டும். எனவே, அந்த பணியை ஒரு சில முபெல்லிக்கள் நிறைவேற்ற முடியாது.

கூறினார்கள்: தப்லீக் பணி மிகவும் பரந்துபட்ட பணியாகும். அந்தப் பணி முறையாக பயிற்சி பெற்ற முபெல்லிக் மார்களால் மட்டுமே பெரும்பாலும் சிறந்த முறையில் செய்ய முடியும். எனவே, வாக்ஃபீனே நவ் பிள்ளைகள் அதிக அதிகமாக, ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு செல்ல வேண்டும்.

ஆனால், நான் கூறிய புள்ளி விவரத்தை வைத்துப் பார்க்கும்போது, நான் முன்னர் குறிப்பிட்டபடி நாம் அனைத்து நாடுகளின் அனைத்து பகுதிகளிலும், சமீபத்தில் அல்ல மாறாக வெகு காலம் வரை முபெல்லிக்மார்களை அமர்த்த முடியாது. முழுநேர முஅல்லிம்களும், முபெல்லிக்மார்களும் இல்லாத வரை புரட்சிகரமான மாற்றமும், புரட்சிக்கரமான தப்லீக் நிகழ்ச்சிகளும் மிகவும் கடினமாகும்.

பிள்ளைகளுக்கு வக்ஃபே நவ்வாக இருப்பதில் மகிழ்ச்சி உள்ளது. சிறுவயதில் அதன் வெளிப்பாடு அதிகம் இருக்கிறது. ஆனால், இந்த ஐரோப்பிய சமூகத்தில் பெற்றோர்களுக்கு சரியான கவனம் இல்லாததனால் உலகக் கல்வியின் தாக்கத்திற்கு ஆளான காரணத்தாலோ அல்லது தமது நண்பர்களின் சபைகளில் அமர்வதன் காரணத்தாலோ ஜாமிஆவிற்கு பகரமாக ஏனைய பாடங்களை படிப்பதன் பக்கம் கவனம் அதிகம் ஏற்படுகிறது. ஜாமிஆவிற்கு செல்வேன் என்று சில பிள்ளைகள் சிறுவயதில் கூறுகின்றனர். ஆனால், ஜி ஸி எஸ் ஸி (GCSC) தேர்ச்சி பெறும்போது, உயர்நிலைப்பள்ளியில் தேர்ச்சி பெறும்போது, பின்னர் முன்னுரிமைகள் மாறிவிடுகின்றன. ஜாமிஆவிற்கு செல்லக்கூடியவர்களின் எண்ணிக்கை ஜெர்மனியிலும், யூகேவிலும் மிகக் குறைவாகவே உள்ளது. இந்த இரண்டு ஜாமிஆவிலும் மற்ற நாடுகளிலிருந்து மாணவர்கள் வருகின்றனர். இவ்வாறு இந்த எண்ணிக்கை குறைந்து கொண்டே செல்கிறது.

ஜமாஅத்துகள் முபெல்லிக்மார்களை, முரப்பிமார்களை தரும்படி கோரிக்கை வைக்கின்றன. அப்படியென்றால், பின்னர் அவர்கள் வாக்ஃபீனே நவ் பிள்ளைகளை ஜாமிஆவில் கல்வி பயில அனுப்பி வைக்க தயார் செய்ய வேண்டும்.

நான் மீண்டும் இதன் பக்கம் கவனமூட்டுகிறேன். உலகில் மார்க்கத்தை பரப்புவதற்கு, மார்க்க கல்விக்கான தேவை உள்ளது. இந்தக் கல்வி என்பது மிக அதிகமாக, மார்க்க அறிவை கற்றுக் கொடுப்பதை நோக்கமாக கொண்ட நிறுவனம் மூலமே கிடைக்க முடியும். அந்த நிறுவனம் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் ஜாமிஆ அஹ்மதிய்யா என்ற பெயரால் அறியப்படுகிறது.

ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கற்றுக் கொடுக்கப்படும் கல்வியைக் குறித்து அன்பிற்குரிய ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்:

படிப்பை பொறுத்தவரை, கற்றுக் கொடுக்கப்படும் கல்வி மிகவும் பரந்துபட்ட கல்வி ஆகும். அதனை ஜாமிஆவின் மாணவர்கள் அல்லாஹ்வின் அருளால் பயின்று வருகின்றனர்.

இதன் பிறகு, ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கற்றுக் கொடுக்கப்படும் பாடங்கள் என்ற தலைப்பைக் கொண்ட கீழ்கண்ட கட்டுரையை அன்பிற்குரிய நுஃமான் அஹ்மது கான் எடுத்துவைத்தார்;

அல்லாஹ் நம்மை இக்காலத்தில் படைத்துள்ளான். இது அல்லாஹ் நம் மீது செய்த சிறப்பான அருளும், கருணையும் ஆகும். ஏனென்றால், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் முன்னறிவிப்புகளுக்கு ஏற்ப இக்காலத்தில் ஹகம், அத்ல் மற்றும் இக்காலத்தின் இமாம் தோன்றியுள்ளார்கள். அன்னார் (அலை) அவர்கள், ஈமானை கார்த்திகை நட்சத்திரத்திலிருந்து இறக்கி மீண்டும் உலகில் நாட்டினார்கள். மேலும், காலத்தின் மாற்றத்தால் திருக்குர்ஆன் போதனைகள் மீது படிந்த தூசியை அகற்றி அதன் அசல் நிலையை நமக்கு காட்டித் தந்தார்கள். கற்றுக் கொடுத்தார்கள். அடுத்து நமது நற்பேறு என்னவென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்குப் பிறகும் கிலாஃபத்தின் பரகத்தால் அதே போதனை தனது அசல் நிலையில் நிலைபெற்றுள்ளது. ஜாமிஆ அஹ்மதிய்யா எப்படிபட்ட மகத்துவ மிக்க கல்விக்கூடம் என்றால், அதில் அந்த போதனைகள் கற்பிக்கப்படுகின்றன.

இன்று உலகம் முழுவதும், இஸ்லாத்தின் சரியான, உண்மையான போதனைகள் கற்பிக்கப்படும். அதுபோன்ற கல்விக் கூடங்கள் இல்லை. இக்காலத்தின் ஹகம், அத்ல் மற்றும் இமாம் மஹ்தியான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களால் நிறுவப்பட்ட கல்விக் கூடத்திலிருந்து மட்டுமே இன்று இஸ்லாத்தின் உண்மையான போதனையை கற்க முடியும்.

தொடரும்............

* * * * *

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2020-2022 Vol. 7 Thursday 08 September 2022 Issue No. 36

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

## ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்களின் ஜெர்மனி சுற்றுப் பயணம்-2013 செப்டம்பர்

வாக்ஃபீனே நவ் பிள்ளைகளுக்கு ஹுஸுர் அவர்கள் நடத்திய வகுப்பு

இந்த நிகழ்ச்சிக்கு நிரலுக்கு ஏற்ப வாக்ஃபீனே நவ் பிள்ளைகளுக்கான வகுப்பு ஆரம்பமானது.

திருக்குர்ஆன் திலாவத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அன்பிற்குரிய தல்ஹா காஹ்லோன் திலாவத் செய்தார். மேலும் அதன் உருது மொழியாக்கத்தை அன்பிற்குரிய லுக்மான் சாகிப் வாசித்து காட்டினார்.

அதன் பிறகு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் கீழ் கண்ட ஹதீஸை அன்பிற்குரிய மப்ரூர் அஹ்மது கான் படித்துக் காட்டடினார்.

ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். எவருக்கு அல்லாஹ் நன்மையையும் முன்னேற்றத்தையும் வழங்க விரும்புகின்றானோ அவருக்கு மார்க்கத்தின் அறிவை வழங்கிவிடுகிறான். (ஸஹீஹ் புகாரி-கிதாபுல் இல்ம்)

இதன் பிறகு, அன்பிற்குரிய ராஹீல் அஹ்மது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கீழ்கண்ட மேற்கோளை முன்வைத்தார்:

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குவது மிகவும் கடினமான காரியமாகும். வாயளவில் மனிதன் கூறிவிடுகிறான். அதை ஒப்புக் கொள்ளவும் செய்கின்றான். ஆனால், அதனை முழுமை செய்வது எல்லாருக்கும் எளிதல்ல. உலகத்தை விட மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்குதல் இவ்வாறு கண்டறியப்படுகிறது. அதாவது, மனிதனின் உலகியல் செல்வத்தில் பாதிப்பு ஏற்படும்போது அவனது உள்ளத்திற்கு எந்த அளவு வேதனை ஏற்படுகிறது! அதற்கெதிரில், ஒரு மார்க்க விவகாரத்தில் பாதிப்பு ஏற்பட்டுவிட்டால் அவரது உள்ளத்தில் எந்த அளவிற்கு வேதனை ஏற்படுகின்றது? என்பதை பார்க்க வேண்டும். அதை அறிந்து கொள்வதற்காக மனிதன் தனது உள்ளத்தை ஆய்வு செய்து பார்க்க வேண்டும். அதாவது, உலக பாதிப்புகளின்போது அவரது உள்ளம் எந்த அளவிற்கு நிம்மதியிழக்கிறது? மேலும் எவ்வளவு கதறுகிறது? பின்னர் மார்க்க பாதிப்புகளின்போது, அவரது நிலை என்னவாக உள்ளது? என்று அவர் தம்மை ஆய்வு செய்ய வேண்டும். ஆனால், தம்மை தாமே ஏமாற்றுபவர் மிக மோசமானவர் ஆவார். மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்காமல், நான் மார்க்கத்திற்கு முன்னுரிமை வழங்கியுள்ளேன் என எண்ணம் கொள்பவர் மோசமானவர் ஆவார். அவர் உண்மையான முறையில் இறைவனுக்கு கட்டுப்பட்டவராக இருப்பதில்லை. ஆனால், தன்னை முஸ்லிமாக (கட்டுப்பட்டவராக) அவர் கருதுகிறார். எவர் ஒருவர் பிறர் மீது அநீதி இழைக்கின்றாரோ, அவர் அநீதி இழைத்துவிட்டு தப்பி ஓடிவிடுவது சாத்தியமாகும். மேலும் இவ்வாறு தன்னை பாதுகாத்துக் கொள்ளலாம். ஆனால், தனது ஆன்மாவின் மீது அநீதி இழைத்தவர் எவ்வாறு தப்பிக்க முடியும்? அவர் அந்த அநீதிக்கான தண்டனையிலிருந்து எப்படி தப்பிக்க முடியும்?

மார்க்கம் மற்றும் அல்லாஹ்விற்கு எல்லா விஷயங்களை விடவும் முதன்மை வழங்குபவர் அருளுக்குரியவர் ஆவார். ஏனென்றால், இறைவனும் அவருக்கு முன்னுரிமை வழங்குகின்றான்.

(மல்ஃபூஸாத் தொகுதி 5, பக்கம் 234-235)

இதன் பிறகு, ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் கவிதை வரிகளை அன்பிற்குரிய கலீம் அஹ்மது சலீம் சாஹிப் அழகிய குரலில் பாடினார்.

**ஜாமிஆ அஹ்மதிய்யாவின் ஓர் அறிமுகம்**

அதன் பிறகு, அன்பிற்குரிய தானியால் தஸவ்வூர், நுஃமான் அஹ்மது கான், மஷ்ஹூர் அஹ்மது அதீப் ஆகியோர் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் தொடக்கம், அதன் நோக்கம், ஜாமிஆவில் கற்றுக் கொடுக்கப்படும் கல்வி, ஏனைய நிகழ்ச்சிகள் மற்றும் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் முக்கியத்துவம், அவசியம் ஆகிய விஷயங்களை உள்ளடக்கிய கட்டுரைகளை எடுத்து வைத்தனர்.

ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜாமிஆ அஹ்மதிய்யாவில் கல்வி பயில்வது தொடர்பாக வழங்கிய வழிகாட்டல்களை அவர்கள் எடுத்துரைத்தனர்:

ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் ஜனவரி 18 2013 அன்று ஜுமுஆ குத்பாவில் வாக்ஃபீனே நவ் பிள்ளைகளிடம், குறிப்பாக ஜாமிஆ அஹ்மதிய்யாவில் மார்க்க கல்வி பயிலும் மாணவர்கள் மீது கவனம் செலுத்தியவாறு கூறினார்கள்:

மார்க்க கல்விக்காக நிறுவப்பட்டுள்ள ஜமாஅத் கல்வி நிறுவினங்களில் செல்வது அவசியமாகும். வாக்ஃபீனே நவ் பிள்ளைகளில் இருந்து ஜாமிஆ அஹ்மதிய்யாவிற்கு செல்லக் கூடியவர்களின் எண்ணிக்கை அதிகமானதாக இருக்க வேண்டும். நம் முன்னால் முழு உலகத்தின் மைதானம் உள்ளது. ஆசியா, ஆஃப்ரிக்கா, ஐரோப்பா, அமெரிக்கா,

இதன் தொடர்ச்சி : 11-ம் பக்கம்

**திருக்குர்ஆனிலிருந்து...**

(செவியேற்பவரே!) இப்ராஹீம் இவ்வாறு கூறிய நேரத்தை (நினைத்துப் பாரும்). என் இறைவா! இந்த (மக்கா) நகரத்தை அமைதிக்குரியதாக்கி வைப்பாயாக. நாங்கள் பொய்தெய்வங்களை வணங்குவதிலிருந்து என்னையும், என் சந்ததிகளையும் காப்பாயாக. (14:36)

A. Basheer Ahmad (Sec. Waqf-e-Jadid, Melapalayam)

O.A. NIJAM 99947 57172

**O.A.N. Doors & Steels**

V.A. SAIT 99430 30230



All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-

5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad